# රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
## அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site


මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු/01
ඔබේ අංකය / Your No:
දිනය / திகதி: / Date: 2021.01.20

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களின் நிறுவனம்சார் நடவடிக்கைகள் தொடர்பில் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்</u>**

இணைந்த சேவைகள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளை மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் 50,000 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களின் நிறுவனம்சார் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு, கீழுள்ள சேவைத் தேவைப்பாட்டுக்காக அன்றாடம் பிரிவிற்கு கிடைக்கப்பெறும் கடிதங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமுரிய அவரவரின் பிரத்தியேகக் கோவைகளில் காணப்படும் குறைபாடுகளை கடிதம் மூலம் அறிவிப்பதற்கு அதிக காலம் மற்றும் உழைப்பினைப் போன்றே செலவினையும் ஏற்க வேண்டியுள்ளது.

02. அதனால் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பின்வரும் நிறுவனம்சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களின் ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் 2021.02.15 ஆந் திகதி முதல் சகல திங்கட் கிழமையும் இவ்வமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். இதன் மூலம் தினசரி இப்பிரிவுக்கு கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு உடனடியாக பதிலளிப்பதற்கு முடியுமாக இருக்கும். அத்தோடு பிரத்தியேகக் கோவைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட வகையில் தலையிட சந்தர்ப்பம் கிடைப்பதன் மூலம் தமது சேவைத் தேவைப்பாட்டினை மிக விரைவில் நிறைவேற்றிக் கொள்ளவும் இயலுமை காணப்படுகின்றது.

- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்களை உள்ளீர்த்தல்.
- பொதுத் திறைசேரிச் சுற்றறிக்கை 394 இன் பிரகாரம் பெயர்களை மாற்றுவதற்கான அனுமதி வழங்குதல்.
- சேவையில் உறுதிப்படுத்துவதற்கான அனுமதி வழங்குதல்.
- பதவியுயர்விற்கான அனுமதி வழங்குதல்.
- பதில் கடமையாற்றுவதற்கான அனுமதி வழங்குதல்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர / தற்காலிகமாக விடுவிப்பதற்கான கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்.
- வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதி வழங்குதல்.
- இடமாற்றத்திற்கான அனுமதி வழங்குதல்.
- சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்வதற்கான அனுமதி வழங்குதல்.

03. இது குறித்து உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துமாறும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள குறைபாடுள்ள ஆவணக் கடிதங்களை எனக்கு அனுப்பி வைக்குமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன். குறித்த ஆவணங்களை ஸ்கான் (Scan ) செய்து இத்துடன் அனுப்பப்பட்டுள்ள இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு குறித்த உத்தியோகத்தருக்கு உமது / உமக்குக் கீழ் பொறுப்பினை ஏற்றிருக்கும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் அலுவலக மின்னஞ்சல் மூலம் அவ்வாவணங்களை அனுப்பி வைப்பதற்கு இயலுமை காணப்படுகின்றது என்பதனை மேலும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. தற்போது எமது நாட்டில் COVID-19 வைரஸ் தொற்று நிலை காரணமாக குறைபாடாக உள்ள ஆவணங்களை கையளிப்பதற்கு அமைச்சுக்கு வருகை தர வேண்டாம் எனவும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்தவும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**இணைப்பு 01**

**அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை/ ஆவணங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரிகள்**

| **விடயம்** | **பெயர்** | **பதவி** | **மின்னஞ்சல் முகவரி** |
|---|---|---|---|
| வெளிநாட்டு லீவு, பதில்கடமை, விடுவிப்பு | திரு . எல் டி.டி.திலகரத்ன | இணைந்த சேவை பணிப்பாளர் IV | dcs-iv@pubad.gov.lk |
| இடமாற்றங்கள் | திரு.யூ.எம்.எஸ்.எஸ். மதுஷங்க | இணைந்த சேவை உதவிப் பணிப்பாளர் | adcs3-dos@pubad.gov.lk |
| தரமுயர்வு | திருமதி. தினூஷா என் . கருணாதிலக | இணைந்த சேவை உதவிப் பணிப்பாளர் | adcs5-dos@pubad.gov.lk |
| நிரந்தரமாக்கல் | திருமதி. எஸ் . ஷிப்கா | இணைந்த சேவை உதவிப் பணிப்பாளர் | adcs2-dos@pubad.gov.lk |
| உள்வாங்கல் மற்றும் கொள்கைசார் விடயங்கள், ஓய்வுபெறச் செய்தல் | செல்வி. பி.கே. பத்பேரிய | இணைந்த சேவை உதவிப் பணிப்பாளர் | adcs1-dos@pubad.gov.lk |

**⋆ மேலே குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான தகவல்களை/ ஆவணங்களை இணைந்த சேவை பணிப்பாளர் IV இற்கு அனுப்புமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன் .**